முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை

இவ்வுடன்படிக்கை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாகவுள்ளதும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கித்தொழில் கம்பெனியொன்றாகவுள்ளதும் (பதிவு இல. PQ 27) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கொழும்பு 2, நவம் மாவத்தை இல. 40 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான **நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி** (இதனகத்துப்பின்னர் ''வியாபாரி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்; அது அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை உள்ளடக்குதல் வேண்டும்) இற்கும்

வாடிக்கையாளர் தனிநபர் ஒருவராகவிருப்பின்;

……………………………………………………………………………………… (முகவரி) என்னும் முகவரியைச் சேர்ந்த ……………………………………… என்னும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக்கொண்ட இலக்கத்தைக் கொண்ட ……………………………………………………………………… (தே.அ.அ. இன் படி பெயர்) (இதனகத்துப்பின்னர் ''வாடிக்கையாளர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்; அது அவரது மரபுரிமையாளர்கள், நிருவாகிகள் மற்றும் சாட்டுநர்களை உள்ளடக்குதல் வேண்டும்) என்பவருக்கும் இடையில் செய்துகொள்ளப்படுகின்றது.

வாடிக்கையாளர் கம்பெனியொன்றாகவிருப்பின்;

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் (பதிவு இல…………..……..) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் …………………………………………… (பதிவு செய்யப்பட்ட வியாபார முகவரி) என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான …………………………………………….. (கூட்டிணைப்புச் சான்றிதழின்படி பெயர்) (இதனகத்துப்பின்னர் ''வாடிக்கையாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்; அது அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை உள்ளடக்குதல் வேண்டும்)

(ஒவ்வொருவரும் ஒரு ''திறத்தவர்'' மற்றும் ஒன்றாகச்சேர்ந்து ''திறத்தவர்கள்'' எனப்படும்) இற்கும் இடையில் செய்துகொள்ளப்படுகின்றது.

1. பொருள்கோடல்

இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களுக்காக, வரையறுத்துக்கூறப்பட்ட பின்வரும் பதங்கள் பின்வரும் பொருள்களைக் கொண்டிருக்கும்:

(அ) **"துரிதப்படுத்தல் திகதி"** என்பது, இவ்வுடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்க, முடிவுறுத்துகை அறிவித்தலை சேர்ப்பிப்பதன் விளைவாக எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் மீள்கொள்வனவுத் திகதி எந்தத்திகதியின் மேல் இடம்பெறுதல்வேண்டுமோ அந்தத் திகதியாகவுள்ளதும் அத்தகைய முடிவுறுத்துகை அறிவித்தலில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்டதுமான திகதி எனப் பொருள்படும்;

(ஆ) **"கடனிறுக்க வகையின்மையாகவுள்ள செயல்"** என்பது, திறத்தவர் ஒருவர் தொடர்பில் (i) திறத்தவர் வழமையான தொழில் நெறியின் போது கடன்கள் வருமதியாக வருகின்றவாறு அவற்றைச் செலுத்துவதற்கு அவருக்கு இயலாமலிருத்தல்; (ii) திறத்தவர், திறத்தவரின் அல்லது திறத்தவரின் ஆதனத்தின் ஏதேனும் முக்கியமான பாகத்தின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளரின், நிருவாகியின், பெறுநரின் அல்லது ஒழிப்போனின் அல்லது ஒத்திசைவான அலுவலரின் நியமனத்தை நாடுதல், அதற்குச் சம்மதமளித்தல் அல்லது அதற்கு இணங்குதல், அல்லது (iii) திறத்தவரின் வங்கிமுறிந்த நிலை, ஒடுக்குதல் அல்லது வேறு கடனிறுக்கு வகையின்மையைச் சார்த்தி அல்லது அவற்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் முகவராண்மையின் முன்னர் திறத்தவர் தொடர்பில் மனுவொன்றை முன்வைத்தல் அல்லது கோப்பிடுதல் அல்லது அது கோப்பிடப்பட்டதிலிருந்து முப்பது (30) நாட்களினுள் எவையேனும் ஒத்திசைவான வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிராமை அல்லது தள்ளுபடிசெய்யப்பட்டிராமை எனப் பொருள்படும்;

(இ) **"உடன்படிக்கை"** என்பது, இம்முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையின் பாகமாக அமைகின்ற எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுடனும் சேர்த்து இம்முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கை எனப்பொருள்படும்;

(ஈ) **"திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலை"** என்பது, தவறுகை நிகழ்வு / முடிவுறுத்துகை நிகழ்வு என்ற இதன் வாசகம் 7 இல் அதற்கு குறித்துக்காட்டப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(உ) **"வியாபார நாள்"** என்பது வியாபாரி பொதுவான வியாபாரத்துக்கு திறந்ததாகவிருக்கின்ற ஒரு நாள் எனப் பொருள்படும்;

(ஊ) **"CDS கணக்கு"** என்பது, ஏற்புடையனவான தகைமையுடைய பிணையங்கள் வைத்திருக்கப்படுகின்ற அல்லது தோதானவாறு வைத்திருக்கப்படவேண்டிய அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமையில் (''லங்காசெகுயர்'') உள்ள வாடிக்கையாளரின் கணக்கு எனப் பொருள்படும்;

(எ) **"உறுதிப்படுத்துகை"** என்பது, இதற்கான பின்னிணைப்பு 1 ஆக காணப்படும் படிவத்தில் பொருளளவில் வியாபாரியினால் வழங்கப்படும் ஒரு உறுதிப்படுத்துகை எனப் பொருள்படும்;

(ஏ) **"தவறுகை வீதம்"** என்பது, இலங்கை மத்திய வங்கியினால் அதன் இணையத்தளத்தில் வெளியிடப்படும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்துடன் சேர்த்து ஆண்டுக்கு 2% எனப் பொருள்படும் (தாமதக் கொடுப்பனவுகள் மீதான வட்டி என்ற இதன் வாசகம் 9 இன் நியதிகளின்படி திருத்தப்படக்கூடியவாறாக);

(ஐ) **"2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணிப்புரை"** என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறான, இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டப் பணிப்புரைகள் எனப் பொருள்படும்;

(ஒ) **"இழிந்த விலை"** என்பது, கடந்த பங்கீட்டு கொடுப்பனவுத் திகதியிலிருந்து இயைபான திகதிவரை இயைபான பிணையத்தின் மீது திரண்டுள்ள வட்டியை உள்ளடக்கிய தகைமையுடைய பிணையத்தின் விலை எனப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஓ) **"தகைமையுடைய பிணையம் / பிணையங்கள்"** என்பது, அரசாங்கம் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படும் வேறு ஏதேனும் பிணையம் எனப் பொருள்படும்;

(ஔ) **"சமமான பிணையங்கள்"** என்பது, பதிலீடு என்ற இதன் 6 ஆம் வாசகத்தின் நியதிகளின்படி கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பதிலீடு ஒன்று இருந்துள்ள ஏதேனும் நிலைமை தொடர்பில், கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களாக அதே வகை, பெயரளவிலான பெறுமதி, விவரணம் மற்றும் தொகையினைக் கொண்ட பிணையங்கள் எனப்பொருள்படும்;

(க) **"தடுக்கொணா வல்இக்கட்டு"** என்பது, போர் (பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்படாத), யுத்த நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயற்பாடு, நீடித்த இராணுவ நடவடிக்கை; உள்நாட்டுப் போர், கலகம், கிளர்ச்சி மற்றும் புரட்சி, இராணுவ அல்லது அபகரிக்கப்பட்ட அதிகாரம், அரசெதிர் கிளர்ச்சி, பயங்கரவாதச் செயற்பாடு, நாசவேலை அல்லது அந்தரங்கத்தன்மை; நாணயம் மற்றும் வியாபார மட்டுப்பாடுகள், தடையாணை, தடை, ஏதேனும் சட்டம் அல்லது அரசாங்க கட்டளையுடனான சட்டமுறையான அல்லது சட்டமுறையற்ற இணங்கியொழுகுகையின் போது அதிகாரச் செயற்பாடு, அரசுடைமையாக்கல், வேலைகளைக் கைப்பற்றல், தேவைக் கோரிக்கை, தேசியமயமாக்கம், கொள்ளை நோய், தொற்று நோய், இயற்கை அனர்த்தம் அல்லது மிதமிஞ்சிய இயற்கை நிகழ்வு, வெடிப்பு, தீ, சாதனங்களின் அழிவு, பகிஷ்கரிப்பு, வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு, மெதுவாக வேலை செய்தல், தொழிற்சாலைகள் மற்றும் வனவுகளை இருப்பாட்சி கொள்ளுதல் போன்ற பொதுவான தொழில் குழப்பம் ஆகியவற்றின் இடம்பெறுகை எனப் பொருள்படும்;

(ங) **"கழிவிடல்"** என்பது, தகைமையுடைய பிணையங்கள் தொடர்பில், பிணையமொன்றின் சந்தைப் பெறுமதியின் மீது ஏற்புடையதாகின்ற ஒரு கழிவிடல் எனப்பொருள்படும்;

(ச) **"வருமானம்"** என்பது, கொள்வனவுசெய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பில், எவையேனும் பங்கீடுகள்,வட்டி,பங்கிலாபங்கள் மற்றும் வழங்குநரினால் செய்யப்பட்ட வேறு ஏதேனும் கொடுப்பனவு (அதன் மீதான முதல் தொகை தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவு தவிர) எனப் பொருள்படும்;

(ஞ) **“லங்காசெகுயர்”** என்பது, லங்காசெட்டில் இன் பாகமாக அமைகின்ற பத்திரங்களற்ற பிணையங்களை இலத்திரனியல் ரீதியில் வழங்குவதற்கும், அத்தகைய பத்திரங்களற்ற பிணையங்களிலான சொத்தாண்மை மற்றும் அக்கறைகளின் வைத்திருக்கைகளை தேக்கிவைப்பதற்கும் அவற்றைப் பதிவதற்கும் பத்திரங்களற்ற பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கும் (திருத்தப்பட்டவாறான) 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை எனப் பொருள்படும்;

(ட) **“லங்காசெட்டில்”** என்பது, (திருத்தப்பட்டவாறான) 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச் சட்டத்தின் 62அ மற்றும் 112அ ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட இலங்கை நிகழ்நேர மொத்த தீர்ப்பனவு மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை எனப் பொருள்படும்;

(ண) **“இ.ரூ”** என்பது, இலங்கை ரூபா எனப் பொருள்படும்;

(த) **“சந்தைப்பெறுமதி”** என்பது, எவையேனும் பிணையங்கள் தொடர்பில், 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணிப்புரைக்கு இணங்க, அல்லது சொல்லப்பட்ட பணிப்புரை வலுவில் இல்லாத பட்சத்தில் இயைபான நேரத்தில் வலுவில் உள்ள இலங்கை மத்திய வங்கியில் வேறு ஏதேனும் ஏற்புடையதான சட்டம் / ஒழுங்குவிதிக்கு இணங்க அல்லது வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது வியாபாரியின் ஆவணப்படுத்தப்பட்ட உள்ளகக் கொள்கையொன்றில் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றும் வியாபாரியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற உள்ளீட்டு மூலமொன்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் சந்தைப்பெறுமதி எனப் பொருள்படும்;

(ந) **“தவறுகை பற்றிய அறிவித்தல்”** என்பது, தவறுகை நிகழ்வொன்றின் இடம்பெறுகை பற்றி தவறுகை புரியாத திறத்தவரினால் தவறுகை புரியும் திறத்தவருக்கு வழங்கப்படும் ஒரு அறிவித்தல் எனப் பொருள்படும்; அத்தகைய அறிவித்தல் ஏற்புடையதான துரிதப்படுத்தல் திகதி மற்றும் முடிறுத்துகைக் கொடுப்பனவுத் திகதியை குறித்துரைக்கும்;

(ப) **"முடிவுறுத்துகை நிகழ்வு பற்றிய அறிவித்தல்"** என்பது, முடிவுறுத்துகை நிகழ்வொன்றின் இடம்பெறுகை பற்றி தவறுகை புரியாத திறத்தவரினால் மற்றைய திறத்தவருக்கு வழங்கப்படும் ஒரு அறிவித்தல் எனப் பொருள்படும்; அத்தகைய அறிவித்தல் ஏற்புடையதான துரிதப்படுத்தல் திகதி மற்றும் முடிறுத்துகைக் கொடுப்பனவுத் திகதியை குறித்துரைக்கும்;

(ம) **"கொள்வனவுத் திகதி"** என்பது, இயைபான உறுதிப்படுத்துகையில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்ட திகதி எனப் பொருள்படும்;

(ய) **"கொள்வனவு விலை"** என்பது, இயைபான உறுதிப்படுத்துகையில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்ட விலை எனப் பொருள்படும்;

(ர) **"கொள்வனவு செய்யப்பட்ட பிணைப்பொறுப்புக்கள்"** என்பது, இயைபான உறுதிப்படுத்துகையில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்ட பிணைப்பொறுப்புக்கள் எனப் பொருள்படும் என்பதுடன் இதன் 6 ஆம் வாசகத்தின் நியதிகளின்படி எவையேனும் பதிலீடு செய்யப்பட்ட தகைமையுடைய பிணையங்களை உள்ளடக்குவதாக கருதப்படுதலும் வேண்டும்.;

(ல) "**நிகழ்நேர மொத்த தீர்ப்பனவு (RTGS)**" என்பது, லங்காசெட்டில் இன் பாகமொன்றாக அமைகின்ற நிகழ்நேரத்தில் முழுமொத்த அடிப்படையொன்றில் இலத்திரனியல் ரீதியில் கொடுப்பனவுகளை செய்முறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்வதற்கான வசதி எனப் பொருள்படும்;

(வ) **"மீள்கொள்வனவுத் திகதி"** என்பது, இயைபான உறுதிப்படுத்துகையில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்ட திகதி எனப் பொருள்படும்;

(அஅ) **"மீள்கொள்வனவு விலை"** என்பது, இயைபான உறுதிப்படுத்துகையில் அத்தகையதாக குறித்துரைக்கப்பட்ட விலை எனப் பொருள்படும்;

(அஆ) **"மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்"** என்பது, ஏற்புடையதான உறுதிப்படுத்துகையில் தரப்பட்டவாறு இதன் நியதிகளுக்கு அமைய, வியாபாரி, உடன்பட்டுக் கொள்ளப்பட்ட திகதியொன்றில் ("கொள்வனவுத் திகதி")

உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விலையொன்றில் (''கொள்வனவு விலை'') வாடிக்கையாளருக்கு தகைமையுடைய பிணையங்களை (''கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்'') விற்பனை செய்வதற்கு உடன்பட்டுக்கொள்வதும் வாடிக்கையாளர் உடனிகழ்வாக உடன்பட்டுக்கொள்ளப்பட்ட திகதியொன்றில் (''மீள்கொள்வனவுத் திகதி'') உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விலையொன்றுக்கு (''மீள்கொள்வனவு விலை'') வியாபாரிக்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை விற்பனை செய்வதற்கு உடன்பட்டுக்கொள்வதுமான ஒரு கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்;

(அஇ) **''நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்''** என்பது, ஏற்புடையதான உறுதிப்படுத்துகையில் தரப்பட்டவாறு இதன் நியதிகளுக்கு அமைய, வாடிக்கையாளர் ஏற்புடையதான கொள்வனவுத் திகதியில் ஏற்புடையதான கொள்வனவு விலையில் வியாபாரிக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை விற்பனை செய்வதற்கு உடன்பட்டுக்கொள்வதும் வியாபாரி உடனிகழ்வாக ஏற்புடையதான மீள் கொள்வனவுத் திகதியில் ஏற்புடையதான மீள் கொள்வனவு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை விற்பனை செய்வதற்கு உடன்பட்டுக்கொள்வதுமான ஒரு கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்;

(அஈ) **''பத்திரங்களற்ற பிணையங்கள்''** என்பது, திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச் சட்டத்தின் நியதிகளின் படி பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கியினால் வழங்கப்படும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகள், பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்கள் எனப் பொருள்படும்;

(அஉ) **''பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள்''** என்பது, திருத்தப்பட்டவாறான 1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் படி வழங்கப்பட்ட பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் எனப் பொருள்படும் என்பதுடன் அக்கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களுக்கு மாற்றப்பட்டுள்ள திறைசேரி உண்டியல்களையும் உள்ளடக்கும்;

(அஊ) ''**பத்திரங்களற்ற திறைசேரி முறிகள்''** என்பது, திருத்தப்பட்டவாறான 1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் படி வழங்கப்பட்ட பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் எனப் பொருள்படும் என்பதுடன் அக்கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி பத்திரங்களற்ற திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டுள்ள திறைசேரி முறிகளையும் உள்ளடக்கும்;

(அள) **"முடிவுறுத்துகை பற்றிய அறிவித்தல்"** என்பது, இதன் வாசகம் 7(iii) இனைப் பின்பற்றி வழங்கப்பட்ட ஒரு அறிவித்தல் எனப் பொருள்படும்;

(அஏ) **"முடிவுறுத்துகைக் கொடுப்பனவுத் திகதி"** என்பது, முடிவுறுத்துகை பற்றிய அறிவித்தலில் தரப்பட்டவாறு, (இதன் நிதிகளுக்கு அமைய) இதன் வாசகம் 7 இன் கீழ் ஏற்புடையதான தொகை செலுத்தப்படத்தக்கதாகவுள்ள திகதி எனப் பொருள்படும்;

(அஐ) **"கொடுக்கல்வாங்கல்"** என்பது, ஒரு மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் அல்லது ஒரு நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்;

மேலதிகமாக, இவ்வுடன்படிக்கையில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய:

(அ) வாசகத் தலைப்புக்கள் இலகுவான குறிப்பீட்டுக்காக மட்டுமே உட்புகுத்தப்படுகின்றதுடன் இவ்வுடன்படிக்கையின் அமைப்பை பாதித்தலாகாது;

(ஆ) வாசகங்களுக்கான குறிப்பீடுகள் இவ்வுடன்படிக்கையின் வாசகங்களுக்கான குறிப்பீடுகளாக பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(இ) ஒருமையைக் குறிக்கும் சொற்கள் பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலையும் பொதுப்பாலையும் மறுதலையாகவும் உள்ளடக்குதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஒரு சட்டவாக்கம் அல்லது துணைநிலைச் சட்டவாக்கத்துக்கான ஏதேனும் குறிப்பீடு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான, மீள சட்டமியற்றப்பட்டவாறான அல்லது பதிலீடு செய்யப்பட்டவாறான அச்சட்டவாக்கத்துக்கான அல்லது துணைநிலை சட்டவாக்கத்துக்கான குறிப்பீடொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

<u>2. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்</u>

(i) திறத்தவர்கள் கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்துகொள்கின்றவிடத்து, வியாபாரி பின்னிணைப்பு 1 இல் தரப்பட்ட படிவத்தில் பொருளளவில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமான நியதிகளை எடுத்துக்கூறி உறுதிப்படுத்துகையொன்றை வழங்குதல் வேண்டும்.

(ii) திறத்தவர்களுக்கு இடையில் செய்துகொள்ளப்படுகின்ற எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் (வேறுவகையாக வெளிப்படையாக உடன்பட்டுக்கொண்டாலொழிய) இம்முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கு அமைந்ததாகவும், அதன் பாகமாக அமைந்ததாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதனால் ஆளப்படுதலும் வேண்டும், அதன் மூலம் அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமான எல்லா உறுதிப்படுத்துகைகளும் இம்முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையும் சேர்ந்து ஒரு தனியான உடன்படிக்கையை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(iii) 7 ஆம் பிரவுக்கு அமைய:

(அ) ஒவ்வொரு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலும் தொடர்பில்:

(அ) கொள்வனவுத் திகதியன்று, வியாபாரி, கொள்வனவு விலையைப் பெறுவதற்கு அமைய (வியாபாரி, வியாபாரியிடமான கணக்கொன்றை வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் விடயத்தில் வியாபாரியுடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்குக்கு பற்றுவைக்கலாம்) ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணைங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு வரவு வைத்தல் வேண்டும் அல்லது ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு பரிமாற்றுதல் வேண்டும்.

(ஆ) மீள்கொள்வனவுத் திகதியன்று, வியாபாரி, ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு பற்றுவைத்தல் வேண்டும் அல்லது ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பரிமாற்றமொன்றை வாடிக்கையாளரின் CDS கணக்கிலிருந்து பெறுதல் வேண்டும் என்பதுடன் மீள்கொள்வனவு விலையை வியாபாரியுடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்குக்கு அல்லது இந்நோக்கங்களுக்காக வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு கணக்குக்கு வரவு வைத்தலும் வேண்டும் அல்லது வாடிக்கையாளருடன் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்

(இ) கொள்வனவு விலைக்கு கொள்வனவுத் திகதியன்று வியாபாரியினால் வாடிக்கையாளருக்கான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு விலைக்கு மீள்கொள்வனவுத் திகதியன்று வியாபாரியினால்

வாடிக்கையாளரிடமிருந்தான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கொள்வனவுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலும், (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களிலான முழுமையான சட்ட மற்றும் பயனுகரி அக்கறையும் முறையே கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளருக்கும் மீள்கொள்வனவுத் திகதியன்று வியாபாரிக்கும் உரித்தாதல் வேண்டும் என வெளிப்படையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டு ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

(ஆ) ஒவ்வொரு நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலும் தொடர்பில்:

(அ) கொள்வனவுத் திகதியன்று, வியாபாரி, ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு பற்றுவைத்தல் வேண்டும் அல்லது ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பரிமாற்றமொன்றை வாடிக்கையாளரின் CDS கணக்கிலிருந்து பெறுதல் வேண்டும் என்பதுடன் கொள்வனவு விலையை வியாபாரியுடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்குக்கு அல்லது இந்நோக்கங்களுக்காக வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு கணக்குக்கு வரவு வைத்தலும் வேண்டும் அல்லது வாடிக்கையாளருடன் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்

(ஆ) மீள்கொள்வனவுத் திகதியன்று, வியாபாரி, வாடிக்கையாளரிடமிருந்து மீள்கொள்வனவு விலையைப் பெறுவதற்கு அமைய (வியாபாரி, வியாபாரியிடமான கணக்கொன்றை வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் விடயத்தில் வியாபாரியுடனான வாடிக்கையாளரின் காசுக் கணக்குக்கு பற்றுவைக்கலாம்) ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணைங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு வரவு வைத்தல் வேண்டும் அல்லது ஏற்புடையதான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வாடிக்கையாளரின் CDS கணக்குக்கு பரிமாற்றுதல் வேண்டும்.

(இ) கொள்வனவு விலைக்கு கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளரினால் வியாபாரிக்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு விலைக்கு மீள்கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளரினால் வியாபாரியிடமிருந்தான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கொள்வனவுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலும், (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக) அத்தகைய கொள்வனவு செய்யப்பட்ட

பிணையங்களிலான முழுமையான சட்ட மற்றும் பயனுகரி அக்கறையும் முறையே கொள்வனவுத் திகதியன்று வியாபாரிக்கும் மீள்கொள்வனவுத் திகதியன்று வாடிக்கையாளருக்கும் உரித்தாதல் வேண்டும் என வெளிப்படையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டு ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

(iv) இரு இணைத் தரப்பினர்களுக்கிடையிலான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களைப் பூர்த்திசெய்தல் அத்துடன் / நீக்குதல், சந்தைப் பெறுமதியைப் பேணுவதற்கு கொள்வனவுத் திகதியிலிருந்து மீள்கொள்வனவுத் திகதி வரை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

3. வருமானம்

(i) மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கலொன்றின் விடயப்பரப்பாகவுள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பில், கொள்வனவுத் திகதியின் பின்னரான ஏதேனும் நேரத்திலும் மீள்கொள்வனவுத் திகதியன்றும் அல்லது அதற்கு முன்னரும் ஏதேனும் வருமானக் கொடுப்பனவு **("வருமானக் கொடுப்பனவு")** வழங்குநரினால் செய்யப்படின், அத்தகைய தொகை, முழுமையாக அத்தகைய தொகைக்கு உரித்துடையதாகவிருக்கவேண்டிய (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக) வியாபாரியின் கணக்குக்காகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வருமானக்கொடுப்பனவு வாடிக்கையாளருக்குச் செலுத்தப்படின், வாடிக்கையாளர் அவ்வாறு பெறப்பட்ட தொகைக்குச் சமமான தொகையொன்றை அதனைப்பெறுகின்ற அதே வியாபார நாளன்று வியாபாரிக்குச் செலுத்துதலும் வேண்டும்; அத்துடன்

(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலொன்றின் கீழ், கொள்வனவுத் திகதியின் பின்னரான ஏதேனும் நேரத்திலும் மீள்கொள்வனவுத் திகதியன்றும் அல்லது அதற்கு முன்னரும் ஏதேனும் வருமானக் கொடுப்பனவு **("வருமானக் கொடுப்பனவு")** வழங்குநரினால் செய்யப்படின், அத்தகைய தொகை, வாடிக்கையாளரின் கணக்குக்காகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வருமானக்கொடுப்பனவு வியாபாரிக்குச் செலுத்தப்படின், வியாபாரி அவ்வாறு பெறப்பட்ட தொகைக்குச் சமமான தொகையொன்றை அதனைப்பெறுகின்ற அதே வியாபார நாளன்று வாடிக்கையாளருக்குச் செலுத்துதலும் வேண்டும்;

4. நிலைமை விவரிப்புக்கள்

(i) வாடிக்கையாளர் வியாபாரிக்கு பின்வருமாறு நிலைமை விவரிப்பைச் செய்கின்றார் (அந்நிலைமை விவரிப்புக்கள், வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்துகொள்கின்ற ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளரினால் மீண்டும் மீண்டும் செய்யப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்):

(அ) வாடிக்கையாளர் முழுமையான தத்துவம், ஆற்றல் மற்றும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார் என்பதுடன் இவ்வுடன்படிக்கை மற்றும் ஏற்புடையதான உறுதிப்படுத்துகையில் தரப்பட்ட நியமங்களின் மீது இவ்வுடன்படிக்கையையும் இதன் கீழான கொடுக்கல்வாங்கல்களையும் செய்துகொள்வதற்கும் அவற்றின் கீழான அவரின் கடப்பாடுகளைப் புரிவதற்கும் எவையேனும் மற்றும் எல்லா அவசியமான அதிகாரவளிப்புக்களையும் சம்மதங்களையும் பெற்றுள்ளார்;

(ஆ) வாடிக்கையாளர் இவ்வுடன்படிக்கையையும் இதன்கீழான அத்தகைய கொடுக்கல் வாங்கலையும் முதல்வராகச் செய்துகொள்கின்றார்.

(இ) வாடிக்கையாளர் ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் கீழ் அல்லது இவ்வுடன்படிக்கையின் கீழ் வாடிக்கையாளரினால் செலுத்தப்படும் எல்லாப் பணத்தொகைகளினதும் தனி பயனுகரிச் சொந்தக்காரர் ஆவார்; கூட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், எவரேனும் கூட்டுத் திறத்தவர் இறக்கின்ற பட்சத்தில், உயிரோடிருப்பவர்/உயிரோடிருப்பவர்கள் அத்தகைய கூட்டுக் கொடுக்கல்வாங்கலில் இறந்தவதரின் எல்லா உரிமைகளுக்கும் உரித்துடையவராதல்/ உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(ஈ) வாடிக்கையாளர், கொடுக்கல்வாங்கல்களைச் செய்துகொள்ளும் வாடிக்கையாளரின் நிதி நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு வரி மற்றும் கணக்கீட்டுச் சிக்கல்கள், இயல்திற நிதிசார் நன்மைகள் மற்றும் ஆபத்துக்கள் அத்துடன் தோதானதன்மை பற்றி முழுமையாக அறிவிக்கப்படுகின்றார் என்பதுடன் அவற்றை மதிப்பீடு செய்வதற்கு இயலுமானதாகவிருப்பதற்கான (வாடிக்கையாளரின் சொந்த அபிப்பிராயத்தினதும் மதிப்பீட்டினதும் அடிப்படையில் அல்லது வாடிக்கையாளர் சுயாதீனமாக பெற்றுக்கொள்வதற்கு அவசியமானது எனக் கருதியுள்ளவாறான வியாபாரியின் அத்தகைய உயர்தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகளின் மேல்) போதிய அறிவையும் அனுபவத்தையும் கொண்டிருக்கின்றார்;

(உ) வாடிக்கையாளர், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இவ்வுடன்படிக்கை தொடர்பில் வியாபாரியின் கருத்து அல்லது ஆலோசனையின் மீது நம்பியிருப்பதில்லை என்பதுடன் வாடிக்கையாளரின் சொந்த மதிப்பீட்டின் அடிப்படையில் (வாடிக்கையாளர் அவசியமானது எனக் கருதியுள்ளவாறான வாடிக்கையாளரின் உயர்தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனையாளர்களிடமிருந்தான அத்தகைய ஆலோசனையை கவனத்திற்கெடுத்தல் உட்பட) வாடிக்கையாளர் ஒவ்வொரு கொடுக்கல் வாங்களையும் செய்வதற்கு தீர்மானித்துள்ளார்; அத்துடன்

(ஊ) வாடிக்கையாளர் தன்னைத் திருப்திப்படுத்திக்கொண்டு இதன்கீழ் ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்கு திறத்தவரொருவராக வருவதன் வரிச் சிக்கல்களை மதிப்பிடுவதற்கு தொடர்ந்து பொறுப்பாவிருப்பார்.

(ii) வியாபாரி வாடிக்கையாளருக்கு பின்வருமாறு நிலைமை விவரிப்பைச் செய்கின்றார் (அந்நிலைமை விவரிப்புக்கள், வியாபாரி கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்துகொள்கின்ற ஒவ்வொரு நாளும் வியாபாரியினால் மீண்டும் மீண்டும் செய்யப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்):

(அ) வியாபாரி முழுமையான தத்துவம், ஆற்றல் மற்றும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார் என்பதுடன் இவ்வுடன்படிக்கை மற்றும் ஏற்புடையதான உறுதிப்படுத்துகையில் தரப்பட்ட நியமங்களின் மீது இவ்வுடன்படிக்கையையும் இதன் கீழான கொடுக்கல்வாங்கல்களையும் செய்துகொள்வதற்கும் அவற்றின் கீழான அவரின் கடப்பாடுகளைப் புரிவதற்கும் எவையேனும் மற்றும் எல்லா அவசியமான அதிகாரவளிப்புக்களையும் சம்மதங்களையும் பெற்றுள்ளார்;

(ஆ) வியாபாரியினால் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் வியாபாரியினாலான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வலுவிலுள்ள எவையேனும் முன்மதியுடைய நியமங்களை அல்லது ஒழுங்குவிதிகளை மீறுதலாகாது.

<u>5. வரிகள்</u>

வேறுவகையாக உடன்பட்டுக்கொண்டாலொழிய, இதன்கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான எல்லாக் கொடுப்பனவுகளும், வரிகளைப் பிடித்துவைத்தல் அல்லது கழிப்பனவு செய்தல் சட்டத்தினால் அல்லது ஏதேனும் வரிவிதிக்கும் அதிகார சபையின் செயன்முறையினால் தேவைப்படுத்தப்பட்டாலொழிய, வரிவிதிப்பதற்கான தத்துவத்தைக்

கொண்டுள்ள ஏதேனும் அதிகார சபையினால் விதிக்கப்படும், அறவிடப்படும், சேகரிக்கப்படும், பிடித்துவைக்கப்படும் அல்லது வரிமதிப்பீடு செய்யப்படும் எத்தன்மையினவுமான எவையேனும் வரிகள் அல்லது தீர்வைகள் அற்றனவாகவும் அவற்றுக்கான பிடித்துவைத்தல் அல்லது கழிப்பனவு இன்றியும் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், அத்தகைய பிடித்துவைத்தல் அல்லது கழிப்பனவு பெற்றுக்கொள்ளும் திறத்தவருக்கு செலுத்தப்படத்தக்கதாக இருக்கின்றதன் பின்னர் அத்தகைய ஏதேனும் கொடுப்பனவை மற்றும் தேறிய தொகையை முழுமொத்தமாக்குவதற்கு செலுத்தும் திறத்தவர் கடப்பாடுடையவாராதல் ஆகாது.

6 பதிலீடு

(i) கொள்வனவுத் திகதிக்கும் மீள்கொள்வனவுத் திகதிக்கும் இடையிலான ஏதேனும் நேரத்தில் ஏதேனும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில், வியாபாரி எவையேனும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கு வேறு தகைமையுடைய பிணையங்களைப் பதிலீடு செய்யலாம், ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தகைமைகொண்ட பதிலீட்டுப் பிணையங்கள், ஆகக்குறைந்தது கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் எந்த சந்தைப் பெறுமதிக்கு அவை பதிலீட்டுத் திகதியில் உள்ளவாறு தொடக்கத்தில் பதிலீடு செய்யப்படுகின்றதோ அந்த சந்தைப் பெறுமதிக்குச் சமமான ஒரு சந்தைப் பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய பதிலீடு, அத்தகைய வேறு தகைமைகொண்ட பிணையங்களை வாடிக்கையாளருக்கு பரிமாற்றுவதன் மூலமும் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பதிலீடு செய்யப்படுதல் தொடர்பில் சமமான பிணையங்களின் இயைபான தொகையை வியாபாரிக்கு உடனிகழ்வாக பரிமாற்றுவதன் மூலமும் செய்யப்படுதல் வேண்டும்.

பதிலீட்டின் பின்னர், பதிலீடு செய்யப்பட்ட பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு பதிலீடு செய்யப்பட்ட மூல கொள்வனவுப் பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களாக இல்லாதொழிதல் வேண்டும். வியாபாரி அதற்கிணங்க வாடிக்கையாரின் CDS கணக்குக்கு பற்றுவைக்கவும் வரவு வைக்கவும் அல்லது அதற்கிணங்க வாடிக்கையாளரின் CDS கணக்கிலிருந்து பரிமாற்றமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அதற்கு பரிமாற்றமொன்றைச் செய்வதற்கு உரித்துடைவயராதல் வேண்டும்.

(ii) அத்தகைய பதிலீடுகள் வியாபாரியின் உடனடி அடிப்படையிலான அல்லது மீள்கொள்வனவு அடிப்படையிலான விற்பனைகளுக்கு வசதியளிப்பதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

7. தவறுகை நிகழ்வு /முடிவுறுத்துகை நிகழ்வு

(i) பின்வருபவை இவ்வுடன்படிக்கையின் கீழ் தவறுகை நிகழ்வுகளை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(அ) திறத்தவர்களுள் எவரேனும் ஒருவர் இதன்கீழான ஏதேனும் கொடுப்பனவு அல்லது ஒப்படைப்புக் கடப்பாட்டைப் புரிவதற்குத் தவறுதல்;

(ஆ) இதன் கீழ் திறத்தவர் ஒருவரினால் செய்யப்படும் எவையேனும் நிலைமை விவரிப்புக்கள் பொய்யானதாக அல்லது ஏதேனும் முக்கியமான அம்சத்தில் பிழைவழியுய்ப்பதாகவிருத்தல்;

(இ) திறத்தவர் ஒருவர் தொடர்பிலான கடனிறுக்கவகையின்மையாகவுள்ள செயல்;

(ஈ) திறத்தவர்களுக்கிடையிலான வேறு ஏதேனும் ஒப்பந்தத் தொடர்பு காலங்கழிதலின் விளைவாகத் தவிர முடிவுறுத்தப்படுதல்;

(ii) தனிநபர் ஒருவராகவுள்ள வாடிக்கையாளர் இறந்தால், சித்தசுவாதீனமற்றவராக வந்தால் அல்லது வேறு வகையாக தகுதியிழந்தவரானால் அத்துடன், இறக்கின்ற பட்சத்தில், வியாபாரிக்கான வாடிக்கையாளரின் நிலுவையாகவுள்ள பணஞ்சார் கடப்பாடுகள் இறந்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களினுள் திருப்திப்படுத்தப்படாமலிருத்தல்;

(iii) தவறுகைபுரிகின்ற திறத்தவர் அறிந்திருக்கின்ற, தவறுகை புரிகின்ற திறத்தவர் தொடர்பிலான ஏதேனும் தவறுகை நிகழ்வு இடம்பெறுவதை தவறுகை புரியாத

திறத்தவருக்கு தவறுகைபுரிகின்ற திறத்தவர் அறிவிப்பதற்கு கடப்பாடுடையவராதல் வேண்டும்;

(iv) ஏதேனும் தவறுகை நிகழ்வு இடம்பெறின், தவறுகை புரியாத திறத்தவர் தவறுகை புரியும் திறத்தவர் மீது முடிவுறுத்துகை அறிவித்தலொன்றைச் சேர்ப்பிக்கலாம்;

(v) தவறுகை புரியாத திறத்தவர் முடிவுறுத்துகை அறிவித்தலொன்றை சேர்ப்பிக்கின்றவிடத்து, இதன் கீழான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும் மீள்கொள்வனவுத் திகதி துரிதப்படுத்தல் திகதியொன்றுக்கு துரிதப்படுத்தப்படுதல் வேண்டும். (அத்திகதி இதன் நியதிகளுக்கிணங்க முடிவுறுத்துகை அறிவித்தல் பெறப்படுவதாக கருதப்படுகின்ற திகதிக்கு முன்னரான திகதியொன்றாகவிருத்தலாகாது). ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் தொடர்பிலான மீள்கொள்வனவு விலை, ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் தொடர்பிலான இயைபான மீள்கொள்வனவுத் திகதியை துரிதப்படுத்துவதை கணக்கிலெடுப்பதற்கு வியாபாரியினால் நல்லெண்ணத்துடன் தீர்மானிக்கப்படும் தொகையொன்றுக்கு அதற்கிணங்க திருத்தப்படுதல் வேண்டும் (அத்தகைய திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலை, ‘‘திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலை’’ எனப்படும்);

(vi) துரிதப்படுத்தல் திகதியொன்று அவ்வாறு இடம்பெறுகின்றவிடத்து, (அ) வியாபாரி (அ) இதன்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் ஒவ்வொன்றினதும் சந்தைப் பெறுமதியை மற்றும் (ஆ) இதன் கீழ் திருத்தப்பட்ட மீள் கொள்வனவு விலைகளை தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் (ஆ) கொடுக்கல்வாங்கல்களின் கீழான திறத்தவர்களின் கடப்பாடு:-

(அ) (அ)எல்லா மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் கீழுமான சந்தைப் பெறுமதிகளின் கூட்டுமொத்த மற்றும் (ஆ) எல்லா நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழுமான திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலைகளின் கூட்டுமொத்தத் தொகைகள் (அத்தகைய தொகை ‘‘வியாபாரியின் தொகைகள்’’ எனப்படும்), (இ) எல்லா நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழுமான சந்தைப்பெறுமதிகளின் கூட்டுமொத்த மற்றும் (ஈ) எவையேனும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான திருத்தப்பட்ட மீள்கொள்வனவு விலைகளின் கூட்டுமொத்தத் தொகைகளை (அத்தகைய தொகை ‘‘வாடிக்கையாளர் தொகைகள்’’ எனப்படும்) விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மிகைத் தொகைக்கு சமமான தொகையொன்றை முடிவுறுத்துகைக் கொடுப்பனவுத் திகதியன்று வியாபாரிக்குச் செலுத்துவதற்கான (இதன் வாசகம் 7(vii) இற்கு

அமைய) வாடிக்கையாளரின்பால் உள்ள கடப்பாடொன்றின் மூலம் தன்னிச்சையாக மாற்றீடுசெய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (இதன் வாசகம் 7(vi) (ஆ) (1) இல் வரையறுத்துக்கூறப்பட்டவாறு) வாடிக்கையாளர் தொகைகள் (இதன் வாசகம் 7(vi) (ஆ) (1) இல் வரையறுத்துக்கூறப்பட்டவாறு) வியாபாரியின் தொகைகளை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மிகைத் தொகைக்கு சமமான தொகையொன்றை முடிவுறுத்துகைக் கொடுப்பனவுத் திகதியன்று வியாபாரிக்குச் செலுத்துவதற்கான (இதன் வாசகம் 7(vii) இற்கு அமைய) வாடிக்கையாளரின்பால் உள்ள கடப்பாடொன்றின் மூலம் தன்னிச்சையாக மாற்றீடுசெய்யப்படுதல் வேண்டும்;

(vii) வியாபாரிக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள கணக்குகளை இணைத்தல், தேறச்செய்தல் அல்லது எதிரீடுசெய்தல் பற்றிய வேறு எவையேனும் உரிமைகளை வரையறுக்காமல், வியாபாரி (அ) இதன் வாசகம் 7(vi)(ஆ)(1) இன் கீழ் அவருக்கு செலுத்தப்படத்தக்கதாகவுள்ள ஏதேனும் தொகையை அவரால் வாடிக்கையாளருக்கு செலுத்தப்படத்தக்கதாகவுள்ள வேறு எவையேனும் தொகைகளுக்கு எதிராக மற்றும் (ஆ) வாசகம் 7(vi)(ஆ)(2) இன் கீழ் அவரினால் செலுத்தப்படத்தக்கதாகவுள்ள ஏதேனும் தொகையை அவருக்கு வாடிக்கையாளரினால் செலுத்தப்படத்தக்கதாகவுள்ள வேறு எவையேனும் தொகைகளுக்கு எதிராக, அவ்வொவ்வொரு விடயத்திலும் அத்தகைய வேறு எவையேனும் தொகைகள் இவ்வுடன்படிக்கையின் கீழ் எழுந்தாலும் சரி அல்லது வேறுவகையாக எழுந்தாலும் சரி எதிரீடுசெய்யலாம்.

<u>8. அறிவித்தல்கள்</u>

அறிவித்தல்கள் மேலே குறித்துரைக்கப்பட்ட முகவரியில் அல்லது வாடிக்கையாளர் வியாபாரிக்கு எழுத்தில் அறிவித்திருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு முகவரியில் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும் என்பதுடன்-

(i) வியாபார நாளொன்றில் வியாபாரியின் வியாபார நேரத்தின் போது (“வியாபார நேரம்”) நேரடியாக ஒப்படைக்கப்படுகின்றவிடத்து, அவ்வியாபார நாளன்று (அல்லது ஒப்படைப்புத்திகதி வியாபார நாளொன்றாக இல்லாதிருப்பின் அல்லது ஒப்படைப்பு

நேரம் வியாபார நேரத்திற்குப் பின்னராகவிருப்பின், அடுத்துவரும் வியாபார நாளன்று வியாபார நேரம் தொடங்கும் போது);

(ii) தொலைநகல் மூலம் ஒப்படைக்கப்படுகின்றவிடத்து, அனுப்பப்பட்டதற்கான ஏற்புடையதான ஒப்புக்கொள்ளலைப் பெறுவதன் மீதான வியாபார நாளன்று (அல்லது வியாபார நாளொன்றல்லாத திகதியில் தொலைநகல் மூலம் ஒப்படைக்கப்படிள் அல்லது ஒப்படைப்பு நேரம் வியாபார நேரத்திற்குப் பின்னராகவிருப்பின், அடுத்துவரும் வியாபார நாளன்று வியாபார நேரம் தொடங்கும் போது),அத்துடன்

(iii) அஞ்சல் மூலம் ஒப்படைக்கப்படின், அனுப்பும் திகதியின் பின்னர் இரு வியாபார நாட்களில்;

(iv) மின்னஞ்சலில் அனுப்பப்படின், சொல்லப்பட்ட மின்னஞ்சல் அனுப்புநரின் முறைமையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது என அனுப்புநரின் முறைமை பதிவுசெய்கின்ற திகதியன்று,

வாடிக்கையாளரினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

9. தாமதக் கொடுப்பனவுகள் மீதான வட்டி

ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் கீழ் அல்லது உடன்படிக்கையின் கீழ் ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதற்கு திறத்தவர் தவறுகின்றவிடத்து, அத்தகைய கொடுப்பனவுக்குரிய திகதியிலிருந்தும் அத்திகதி உட்படவும் ஏற்புடையதான கொடுப்பனவு எத்திகதியன்று மற்றைய திறத்தவரினால் உண்மையாகப் பெறப்படுகின்றதோ அத்திகதி வரையும் ஆனால் அத்திகதி நீங்கலான காலப்பகுதிக்கு செலுத்தப்படற்பாலதான ஆனால் செலுத்தப்பட்டிராத தொகை மீது வட்டியானது தவறுகை வீதத்தில் திறத்தவரினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அத்தகைய வட்டி நாளாந்த கூட்டு வட்டி அடிப்படையிலும் கழிந்துள்ள நாட்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையிலும் கணக்கிடப்படும்.

10. கைமாற்றப்படமுடியாத தன்மை

(i) திறத்தவர்கள் எவரும் இவ்வுடன்படிக்கையின் கீழ் அவர்களது உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுள் எவற்றையும் கைமாற்றுதலோ அல்லது குறித்தளித்தலோ ஆகாது அல்லது மற்றைய திறத்தவரின் எழுத்திலான முன் சம்மதமின்றி அவை தொடர்பில்

எவையேனும் மூன்றாம் திறத்தவர் உரிமைகளை உருவாக்குவதற்கு நாடுதலோ ஆகாது.

(ii) கொள்வனவுசெய்யப்பட்ட பிணையங்கள், கொள்வனவுத் திகதிக்கும் மீள்கொள்வனவுத் திகதிக்குமிடையிலான ஏதேனும் நேரத்தில் உடனடி அடிப்படையில் விற்பனை செய்யப்படுதலாகாது. கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள், கொடுக்கல்வாங்கலின் கொள்வனவு மற்றும் மீள்கொள்வனவுத் திகதிக்குமிடையிலான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக எவ்வாறாயினும் வியாபாரியினால் பயன்படுத்தப்படலாம்.

<u>11. வியாபாரியின் கடப்பாடுகள் / தடுக்கொணா வல்இக்கட்டு</u>

(i) இதன்கீழான வியாபாரியின் கடப்பாடுகள் வியாபாரியினால் மட்டும் புரியப்படக்கூடியனவாக இருப்பதுடன் அத்தகைய புரிகை இலங்கையில் உள்ள எல்லா ஏற்புடையனவான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், நடத்தைக் கோவைகள், லங்காசெட்டில் முறைமை விதிகள் மற்றும் வேறு வழிகாட்டுநெறிகளுக்கான கடுமையான அமைந்தொழுகுகைக்கு அமைந்தனவாதலும் வேண்டும். தடுக்கொணா வல்இக்கட்டு அல்லது அரசின் செயல் காரணமாக இதன் கீழான வியாபாரியின் கடப்பாடுகளைப் புரிவதற்கு அவருக்கு சாத்தியமற்றதானால் அல்லது செயல்முறைக்கு உகந்ததற்றதானால், அத்தகைய கடப்பாடுகள், அத்தகைய கடப்பாடுளை வியாபாரி புரிவதற்கு சாத்தியமாக இராதில்லாமல் இருக்கும் வரை அல்லது செயல்முறைக்கு உகந்ததாக இராதில்லாமல் இருக்கும் வரை இடைநிறுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் வட்டி அல்லது வேறு கொடுப்பனவு எதுவும் (அத்தகைய இடைநிறுத்துகை எதுவும் இடம்பெற்றிருந்திருக்காவிடின் அத்தகைய கடப்பாடுகள் தொடர்பில் செலுத்தப்பட்டிருந்திருக்கக்கூடிய ஏதேனும் வட்டி அல்லது வேறு கொடுப்பனவு தவிர) இடைநிறுத்துகைக் காலப்பகுதியின் போது, இடைநிறுத்தப்பட்ட கடப்பாடுகள் தொடர்பில் செலுத்தப்படுதலாகாது; ஆயின் மற்றைய திறத்தவர் தொடர்பில் ஏதேனும் தவறுகை நிகழ்வு அல்லது முடிவுறுத்துகை நிகழ்வின் மேல், அத்தகைய சூழ்நிலைகளில் ஏதேனும் தேறச்செய்தல் அல்லது எதிரீட்டில் இயைபான கடப்பாட்டின் பெறுமதியை வியாபாரி உள்ளடக்குவதை இயலச்செய்வதற்கு அத்தகைய கடப்பாடு புரியப்படுவதற்கு உள்ளது என வியாபாரி வெளிப்படுத்தலாம்.

12. <u>ஆளும் சட்டம் / நியாயாதிக்கத்திற்குக் கீழ்ப்படிதல்</u>

இவ்வுடன்படிக்கை மற்றும் இதன் கீழ் செய்துகொள்ளப்பட்ட எல்லாக்கொடுக்கல்வாங்கல்களும் இலங்கைச் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் திறத்தவர்கள் இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு கீழ்ப்படிதலும் வேண்டும்.

இதற்கத்தாட்சியாக திறத்தவர்கள் இவ்வாவணத்தின் முதலாவது பக்கத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதாக கீழே குறித்துரைக்கப்பட்ட முறையான திகதிகளில் இவ்வாவணத்தை நிறைவேற்றியுள்ளனர்.

வியாபாரியின் பெயர்:

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி.

கையொப்பம்:………………………..	கையொப்பம்:………………………..
அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்	அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்
பெயர்:	பெயர்:
பதவிப்பெயர்:	பதவிப்பெயர்:
திகதி:	திகதி:

சாட்சி:

கையொப்பம்:………………………..	கையொப்பம்:………………………..
பெயர்	பெயர்

[வாடிக்கையாளர் தனிநபராகவிருக்கின்றவிடத்து]

கையொப்பம்:……………………….. …………………………….. (நகரம் / பட்டினம்) என்னும் இடத்தில் கையொப்பமிடப்பட்டது.

சாட்சி:

கையொப்பம்……………………….. கையொப்பம்………………………..

பெயர்………………………….. பெயர்………………………………..

[வாடிக்கையாளர் கூட்டிணைக்கப்பட்டுள்ளவிடத்து]

……………………………………………… இன் பொது இலச்சினை பின்வருவோர் முன்னிலையில் ………………………………(நகரம் / பட்டினம்) இல் பொறிக்கப்பட்டது. (இலச்சினை பொறிக்கப்பட்டு பணிப்பாளர்கள் கையொப்பமிடுகின்றனர்)

கையொப்பம்……………………….. கையொப்பம்………………………..

பெயர்………………………….. பெயர்………………………………..

(பணிப்பாளர்) (பணிப்பாளர் / கம்பெனிச் செயலாளர்)

இதன் இலச்சினையிடுகையை இத்தால் நாம் அத்தாட்சிப்படுத்துகின்றோம்;

<u>சாட்சி</u>

கையொப்பம்……………………….. கையொப்பம்………………………..

பெயர்………………………………. பெயர்………………………………..

அல்லது

கையொப்பமிடப்பட்டது:

கையொப்பம்……………………….. கையொப்பம்………………………..

பெயர்………………………………. பெயர்………………………………..

(கம்பெனியின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள் …………………………….. (நகரம் / பட்டினம்) என்னும் இடத்தில் கையொப்பமிட்டனர்).

<u>சாட்சி</u>

கையொப்பம்……………………….. கையொப்பம்………………………..

பெயர்………………………………. பெயர்………………………………..

<u>பின்னிணைப்பு 1</u>

<u>வியாபாரியின் கடிதத்தலைப்பு</u>

யாருக்கு: [வாடிக்கையாளர்]

யாரால்: [வியாபாரியின் பெயர்]

திகதி:

விடயம்: கொடுக்கல்வாங்கல் (குறிப்பீட்டு இல: [ ])

அன்புள்ள ஐயா,

(எமக்கிடையிலான முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக ''உறுதிப்படுத்துகை'' ஒன்றை அமைத்துருவாக்குகின்ற (**"உடன்படிக்கை"**)) இக்கடிதத்தின் நோக்கம் கீழே குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத் திகதியன்று எமக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலின் நியதி நிபந்தனைகளை எடுத்துக்கூறுவதாகும்.

இவ்வுறுதிப்படுத்துகை இவ்வுடன்படிக்கையை குறைநிரப்புகின்றதுடன் அதன் பாகமாகவும் அமைகின்றது அத்துடன் அதற்கு அமைந்ததாகவுமுள்ளது; இவ்வுடன்படிக்கையில் அடங்கியுள்ள எல்லா ஏற்பாடுகளும் கீழே வெளிப்படையாக திரிபுபடுத்தப்பட்டவாறு தவிர இவ்வுறுதிப்படுத்துகையை ஆளுகின்றது. உடன்படிக்கையில் வரையறுத்துக்கூறப்பட்டதும் இவ்வுறுதிப்படுத்துகையில் பயன்படுத்தப்பட்டதுமான சொற்களும் சொற்றொடர்களும் உடன்படிக்கையில் உள்ளவாறு இதன்கண் அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வுறுதிப்படுத்துகையினால் சான்றளிக்கப்படும் கொடுக்கல்வாங்கல் லங்காசெகுயரின் மத்திய வைப்பக முறைமையில் பதியப்படுதல் வேண்டும்.

1. ஒப்பந்தத் திகதி:
2. கொடுக்கல்வாங்கலின் தன்மை: [மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்] [நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்]
3. கொள்வனவுசெய்யப்பட்ட பிணையங்கள்:

[விபரங்கள்+ ISIN முதலிய இலக்கங்கள்]

4. கொள்வனவுத் திகதி:

5. கொள்வனவு விலை: [ ] இ.ரூ.

6. மீள்கொள்வனவுத் திகதி:

7. மீள்கொள்வனவு விலை:

8 மேலதிக நியமங்கள்:(ஏற்புடையதான கழிவிடல்)

நிறைவேற்றும் நோக்கத்துக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இவ்வுறுதிப்படுத்துகையின் பிரதியை நிறைவேற்றி அதனை எமக்கு [பின்வரும் முகவரிக்கு] திருப்பியனுப்புவதன் மூலம் மேற்போந்தவை கேள்வியில் உள்ள மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலின் நியதிகளை சரியாக எடுத்துக்கூறுகின்றன என உறுதிப்படுத்தவும்

எமது தொலைநகல் இலக்கம்: எமது தொலை அச்சு இலக்கம்:

ஆவணம்சார் கேள்விகளுக்கு எமது தொலைபேசி இலக்கம்:

அன்புடன்,

____

(வியாபாரியின் பெயர்)
இற்காகவும் அவர் சகர்பாகவும்

உறுதிப்படுத்துகையானது (வியாபாரியின் பெயர்) உடன் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கலை சரியாகப் பிரதிபலிக்கின்றது என நான் / நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம்.

கையொப்பமிடப்பட்டது

____

[வாடிக்கையாளர்]
திகதி: